DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.25/17

Deposition of Witness: PW 2

| | |
|---|---|
| Name ஜெயலட்சும் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.01.2020

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் பிசிபட்டி அரசு நகரில் குடியிருந்து வருகிறேன். வேலைக்கு செல்வது இல்லை. அசா1 என் கணவர். 6.6.16ம்தேதி நானும் என் கணவரும் சென்னைக்கு புறப்பட்டு என் மகள்வீட்டிற்கு சென்றோம். அண்டை வீட்டில் குடியிருக்கும் செந்தில்கணேச் என்பவர் எங்களுக்கு போன் செய்து வீடு திறநதுகிடப்பதாக 5 நாட்கள்கழித்துதகவல் சொன்னார். நாங்கள் வருவதற்கு காலதாமதம் ஆகும் என்பதால் நீங்கள் திறநது பாருங்கள் என்று சொன்னோம். வீட்டின் கதவுகள் மற்றும் பீரோவின் கதவுகள் திறந்தகிடப்பதாகவும் துணிகள்கிழே கிடப்பதாகவும் சொன்னார். 14.6.16ம் தேதி இரவு 3.00மணிக்கு நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். வந்த பார்த்த போது. பீரோவில் இருந்த 5பவுன் கொதுமை செயின், 1 பவுன்கட்டிங் செயின், 1 பவுன் எடையுள்ள ஒரு ஜோடிதோடுகள் , தலா 1-2 பவுன் எடையுள்ள 2 மோதிரங்கள் ஆகியவை மொத்தம் 8 பவுன் நகை திருடப்பட்டிருந்தது. மேலும் டிஜிடிட்டல் கேன் கேமராவும் திருடப்பட்டிருந்தது. அதன்பின்னர் என் கணவர் அசா1 காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார். என்னையும் இது சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள். அதன்பின்னர் என் கணவர் காவல்நிலையத்திற்கு நகை சம்மந்தமாக சென்று வந்தார் 3 பவுன் நகை மட்டும் கிடைத்ததாக சொன்னார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

வழக்கு சம்மந்தமாக எனக்குநேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக புகார் கொடுக்கவோ, நகை வாங்கவோ நான் செல்லவில்லை என்றால் சரிதான. என் கணவர் தான் சென்றார். எங்கள் வீட்டை உடைத்துநகைகளை யார் திருடினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.